உ

# சண்முகநாதன்.

[REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER.]

# SANMUKANATHAN.

| பத்திர விகிதம். | |
| --- | --- |
| உள்ளூருக்கு வருஷம் 1-க்கு ரூ. | 1-50 |
| வெளியூருக்கு ,, | ,, 2-00 |
| தோவொப்பகுதிக்கு | ,, 2-50 |
| தனிப்பிரதி | சதம் 6 |

மாசமிருமுறை பிரகடனமாகும்.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றியொழுகப்படும்.

| விளம்பர விகிதம். | |
| --- | --- |
| முதன்முறைக்கு. | ரூ—ச. |
| ஒரு கலத்துக்கு | 6-00 |
| அரைக்கலத்துக்கு | 3-00 |
| கால்கலத்துக்கு | 2-00 |
| வரி 1-க்கு | —8 |
| அடுத்த முறைக்கு நெ. அரைவாசி. | |

மலர் 5. ❋ யாழ்ப்பாணம், இராக்ஷத வருஷ பங்குனிமீ 28உ (9—4—16) ❋ இதழ் 14.

உ

குருமயம்.

சங்கரன்றன் சால்பிறநற் சண்முகநாதன் பெயரோ. டிக்கிதமாம் பத்திரமு மொராளுந— நாங்களுடன், உன்னரிய கன்னிலைமை யுற்கிறன் ருப் பல்லி—, கன்னவன்று வோதினை யாம்.

## சண்முகநாதன்.

யாழ்ப்பாணம்—இராக்ஷதவஸ பங்குனிமீ 28உ

### ஸ்ரீமத் ஸ. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள்.

சித்தாந்தசைவசித்தாந்த சமயமாம்பு நந்தசைவசமய சாஸ்திரச் சமுக மாமய சமுத்திரத்தைப் பருகி யேப்பமிட் டிரு மார்ந்த அவர்தட் டிபாக்த தன் பெருஞ்சீலத் தம்போற் பிறரெவரும் மிகவெளிதில் நன்குணருமாறு சொற்சுவை பொருட்சுவை பத்திரிகையில் முகஞ்செய சொட்டச்சொட்டச் செந்தமிழ்வசனவாம்பொருகிறிதும் பிறழாது எதுகைமோனையொடு சேர்ந்த சந்தவின்பம்பெறத் தொடுத்த வசனநடையினாலே பன்னெடுங் காலமாகக் கைம்மாறு கருதாது பரோபகாரார்த்தமாகவே பத்திரிகைவாயிலாக விரித்துரைத்தலே பொழுதுபோக்காகக் கொண்டு தம் வாணாளைக் கழித்தவரும், "பத்திராதிபர்" என்னும் விசேடநாமந் தனக்கே யுரிமையாகக் கொண்டவரும், கவிபாடுதிற்றமக் கிணையற்றவரும், சைவசித்தாந்தப் பிரசாரஞ்செய்வதி லதிசமர்த்தரும் ஆகிய நல்லூர் ஸ்ரீமத். ஸ. சரவணமுத்துப்பிள்ளையவர்கள் சென்றமீ 3உ வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் சிவபதமடைந்தார்கள் என்னுஞ் செய்தி எமது மனத்தையும் புண்படுத்தாநின்றது. பிள்ளையவர்கள் வண்ணைமாநகரில் வசித்த சங்கரவேளாளகுலதிலகராகிய ஸ்ரீ. சுப்பிரமணியமவர்களது புத்திரரெத்தினமாயுள்ளவர்கள். தமதிளமைப்பராயத்திலே தானே சற்குருநாதசுவாமியாகிய ஸ்ரீலஸ்ரீ. நாவலரவர்களது கிட்டவர்க்கத்தினரோடு மிக்க நண்புபூண்டு அவர்களோடுங் கல்விகற்று அளவளாவி இலக்கண இலக்கியங்களிலும் சமயசாத்திரங்களிலும் நன்குபயின்றவர்கள்.

சங்கமருவிய நூல்களும் ஆன்றோராலாளப்பட்ட திருவருட் சிறப்புவாய்ந்த ஏனைய நூல்களுமேயன்றிப் பொய்ப்புலமையோரியற்றிய நூல்களை மிகழ்ந்தொதுக்கிவிடுஞ் செந்தமிழ்ப் பேரபிமானி. திருவாதவூரர் புராணத்திற்குத் திருத்தமும் பொருத்தமும் சுருக்கமும் பெருக்கமும் பிறவுமமையுமாறு உரையெழுதி உலகுவப்பச்செய்த யாழ்ப்பாண வித்துவான்களுள்ளே முதல்வராயுள்ளவர்கள் இவர்களே. கும்பகோணத்திலே பன்னெடுங்காலமாகச் சிவயோகநிஷ்டையிலமர்ந்து சமீபத்திற் பரிபூரணதசையடைந்த சிவஞானச்செல்வராகிய ஸ்ரீமத். மௌனகுருசுவாமிகள்பேரில் ஒரு திவ்விய தோத்திரப்பாமாலை இயற்றினவர்கள்.

எப்பெருஞ் சிறப்புடையரேயாயினும் அவர் சித்தாந்தசைவ நெறிக்கு மாறுபட்ட கொள்கையுடையரேயாமாயின் முன்பின் யோசியாது தர்க்கமுறை பிறழாது நியாயவழிநின்று அவரைத் தக்கவாறெதிர்த்து நல்லறிவுச்சுடர் கொளுவியன்றி ஓயாத திடசித்தமுடையவர்கள். இன்னும் பிள்ளையவர்கள் கல்விகேள்விகளின்மாத்திரமன்றிச் சிவபத்தி, சிவனடியார்பத்தி, சிவசாத்திரபத்திகளிலும், ஒழுக்கம், நேர்மை, தவம் தானம் முதலியவற்றிலும் மேம்பட்டவர்கள்.

வனபரிபாலனபகுதியில் தக்க உத்தியோகமாயிருந்து சமீபத்திற் சிவபதமடைந்தவரும், ஆரியதரிசனம் மநுநீதித்துவசாஸ்திரம் மனோவியசாஸ்திரம் முதலியவற்றில் அதிபாண்டித்தியம் படைத்தவரும் மில்றன்முதலாய சில ஆங்கிலநாடகங்களைத் தமிழில் இயற்றியவரும் ஆகிய ஸ்ரீ. சிவஞானசங்கரனுக்கு அரிய தந்தையாயுள்ளவர்கள். சைவோதயபானு எனப் பிரசித்திபெற்றிய சைவசமயச் செந்தமிழ்ப்பத்திரிகையை எவரும் வியக்கும்படி யாழ்ப்பாணத்திலே நடாத்திய தோடமையாது மதுரையிலுஞ் சிலகாலம் நடாத்திப் புகழ்படைத்தவர்கள். நமது 'சண்முகநாத'னுக்கு இரண்டுவருடகாலமாக யாதோருதவியுங்கருதாது அரியபெரிய விஷயங்களை யெழுதியும் ஒரு வருடகாலம் அதாவது மரணபரியந்தம் பத்திராதிபராயிருந்தும் சிவநேசர்களாகிய தமிழ்மக்களுக்குப் பெருநன்மைபுரிந்தவர்கள். உபயவேதாகமபண்டிதர் பிரமஸ்ரீ. ந. வே. கனகசபாபதி ஐயரவர்கள், ஸ்ரீமத். கைலாசபிள்ளையவர்கள், ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள், ஸ்ரீ. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் முதலிய கவிமன்னர்களோடு என்றுமகலா நண்புபூண்டுள்ளவர்கள். இந்தியாவில் பற்பலவிடங்களிலும் பத்திரிகை நடாத்திப் பெரும்பெயர் படைத்தவரும் இப்பொழுது நன்று நடைபெற்று வருவதாகிய "விஜயபானு"ப் பத்திராதிபருமாகிய ஸ்ரீ. க. சச்சிதானந்த நமசிவாய அவர்களோடு இளமைதொட்டுப் பூண்ட பெரு நட்பாளராயுள்ளவர்கள். இராமநாதபுரத்து முத்துவிஜயரகுநாத பாஸ்கரசேதுபதி மன்னரவர்களிடத்துப் பிரபந்தம்பாடிச் சென்று பரிசில்பல பெற்றவர்கள். பலவித்துவான்கள் செய்த உரைநூல் செய்யுணூல்களுக்கெல்லாம் வாய்கொண்ட மட்டும் சாற்றுகவிசொல்லி அவர்களை யூக்கப்படுத்தும் உத்தமகுணம் பூண்டவர்கள்.

யாழ்ப்பாணத்து மகாவித்துவான் அரசகேசரியாற் பாடப்பெற்ற காவியரத்தினமாகிய இரகுவம்மிசத்திலே சித்தாந்தசாரம் நன்கமையவில்லையென்று அதனையும் ஓதுக்குவார்களேயாயின் பிள்ளையவர்களது சித்தாந்தசாத்திர பத்தியின் றிடிப்பு இத்துணைத்தென்று நம்மாலுஞ் சொல்லமுடியுமா?

இத்துணைப் பெருமைவாய்ந்த இவ் வித்துவரத்தினத்தை இழக்கநேர்ந்தது யாழ்ப்பாணத்தவர்களது துர்திஷ்டமே. இவர்களது ஆப்த நண்பர்களாகிய வித்துவான்கள் இவர்களது பிரிவாற்றாமையைக்குறித்துக் கூறிய இரங்கற்பாக்கள் அடுத்துவரும் பத்திரிகைகளில் வெளியிடுவாம். எனினும் அகப்பட்டவற்றுள் இரண்டொன்றைமாத்திரந் தருவாம்.

வெண்பா.

சைவோதயபானு சண்முகநா தன்
வழியாச், சைவா கமங்கள் சமயநெறி—
சைவர்கட்குச், சத்துவமா யோதுஞ் ச
ரவணமுத்துப் புலவன், செத்தானே ஐ
யோ சிவா.

கலித்துறை.

சைவசித்தாந்த சரபஞ் சபாப்பிரச
ங்க சிங்கம், ஐவகைத்தாய இலக்கணசா
கரம் ஆய்ந்ததமிழ்த், தெய்வத்திருமறை
சேர்ந்தபுராணந் திகழடியார், உய்யச் ச
ரவணமுத்த னென்றாரிவ குரைப்பவரே.

முத்தொப்பன வசனத்தொடை
மோனை யெதுகைபெற, வைத்துப் பலக
வி வேய்ந்தருமாந்தி மிகவியன, கத்துப்
பெருந்தமிழ் கைசலியாது கடிதெழுது,
சித்திரச்சரவண முத்துப்புலவனுஞ் சென்
றனனே.

---

## இந்துசமயமும் சைவசமயமும்.

(:0:)

### இந்துசமயம்.

இப்பூவுலகின்கணுள்ள கண்டங்கள் எல்லாவற்றுள்ளும் பரதகண்டமே மிகச் சிறந்தது. தெய்வத்தன்மையுள்ள மலைகள், தெய்வ நதிகள், சமுத்திர தீர்த்தங்கள், தேவாலயங்கள், தெய்வ தலங்கள், தெய்வ விருக்ஷங்கள், தெய்வ விருடிகள் முதலாய விசேடங்கள் பல்லாயிரக்கணக்காயிருந்தலால் முத்தி சித்தித்தற்குரிய பக்திமார்க்க முதலிய நெறிகளைக் கைத்தலாமலகம்போற் காட்டுமியல்பினவாகிய வேதாகமபுராண இதிகாசங்களும்; பிறதெய்வத்திரு[illegible] பொலிந்து விளங்குவதாலும் அது புண்ணியபூமியெனவும்படும். புண்ணியம்விளையும் பூமி என்பது பொருள். அதுதான் யாதுபற்றியாலோவெனின், இப் பூமண்டலமானது மருதம், முல்லை, நெய்தல், குறிஞ்சி, பாலை என ஐந்து பகுப்புடையதாய் இவ்வைந்தும் முறையே வயலும் வயல்சார்ந்தநிலமும், அடர்ந்தகாடும் காடுசார்ந்தநிலமும், கடலும் கடல்சார்ந்த நிலமும், மலையும் மலைசார்ந்தநிலமும், புல்பூண்டு முதலிய ஒன்றும் முளையாதவனாந்தரமும் எனவும், அவற்றுள்ளும் மருதநிலமானது நன்செய்நிலம், புன்செய்நிலம், மேட்டுநிலம், சாம்புநிலம், சுடுகாடு, இடுகாடு எனவும் வளங்கிறாற்போல ஆசியா முதலாய கண்டமைந்தும் மருதம் முதலாய ஐந்து நிலம் போலவும் அவற்றுட் சிறந்த ஆசியாக்கண்டம் மருதநிலம்போலவும், அவ்வாசியாக்கண்டத்திலுள்ள ஏனைத் தேசங்களெல்லாம் அம் மருதநிலத்திலுள்ள புன்செய்நிலம், தரிசுநிலம், மேட்டுநிலம், சுடுகாடு, இடுகாடுகள் போலவும்.

பரதகண்டமானது சைவசமயமாகிய செந்நெற்பயிர் விளையுகின்ற வயலாகிய நன்செய்நிலம்போலும். சைவப்பயிர் தழைத்தோங்கும் பரதகண்டத்திலுள்ள ஏனைச் சமயங்களெல்லாம் களைகளாகும். காலத்துக்குக் காலம் திருவவதாரஞ்செய்து பரமதகண்டனமுஞ் சுவமதஸ்தாபனமுஞ் செய்துபோந்த அடியார்கள் பயிர்மாந்தர்களும் போலவும் விளங்குதலினாலேதான் பரதகண்டம் புண்ணியபூமியென்னப்பட்டது.

இப்புண்ணிய பூமியின்கண்ணே காலத்துக்குக்காலம் வேற்றரசர் படையெடுத்துவந்து செய்தமாற்றங்கள் பலவாயின. அம்மாற்றங்களுள்ளே இந்தியா என்னும் பெயர் பரதகண்டத்துக்காக மாறியதும் ஒன்று. இவ்விந்தியா என்னும் பெயர் யாதுகாரணம்பற்றி வழங்கப்படுவது என்பது தெரியவில்லை. ஒருவேளை "இந்து" "சிந்து" என்னும் நதிகளும், "இந்துஸ்" தானம் என்னும் நாடும், "இந்தி" என்னும் பாஷையும் உளவாந்தன்மை பற்றி அச்சம்பந்தம் காரணமாக "இந்தியா" என அவ்வேற்றரசர் இட்டனர்போலும். (நாமும் பரதகண்டத்தை இந்தியா என்றே வழங்குவோமாக.)

இவ்விந்தியாவிலே வசிக்கும் எச்சாதியாரும் எச்சமயத்தாரும் பொதுவாக இந்தியரெனப்படுவர். அஃதாவது இந்தியாவின் பூர்வகுடிகள் என்பது கருத்து. இவ்விந்தியரும் சைவர், வைணவர், பௌத்தர், மகமதியர், கிறிஸ்தவர் எனப் பல சமயத்தினராவர்.

இக்காலத்திலே இந்தியாவிலேயுள்ள பிரசித்திபெற்ற சமயங்களுள்ளே, கிறிஸ்துசமய மொழிந்த ஏனைச் சமயங்களெல்லாம் இந்துசமயங்களேயாக, புத்தசமயம், மகமதியசமயம் முதலாயின. அவ்வச் சமயகர்த்தாக்களின் பெயரால் வழங்கப்பட்டு நமது சைவ வைணவ சமயங்கண்மாத்திரம் இந்துசமயம் என வழங்கிவருவது யாதுகாரணம்பற்றியோ வறியேம்.

இனி, "இந்தியன்" "இந்து" என்னும் இருபதங்களின் பொருள் வேறுபாட்டை உற்றுநோக்குங்கால் "இந்தியன்" என்பது இந்தியாவின் பூர்வகுடியாயுள்ளவன் எனவும். "இந்து" என்பது இந்து சமயி எனவும் பொருள்[illegible] வழக்கத்தில் வருகின்றன. இந்தியாவின் பழங்குடியாயுள்ளா னொருவன் [illegible] இந்தியன் எனப்படுதல்போல அவ்விந்தியாவில் உற்பத்தியான சமயங்களும் இந்தியசமயங்களென்றன்றோ வழங்கப்படல்வேண்டும். அல்லாக்கால், கிறிஸ்துசம்பந்தமாயுள்ளது கிறிஸ்தசமயம், மகமதுசம்பந்தமாயுள்ளது மகமதியசமயம், சிவசம்பந்தமாயுள்ளது சைவசமயம் என்பனபோல இந்துசமயத்திற்கு யாது சம்பந்தங்கூறலாம்; இந்துவா? இவ்விந்து தான்யாதோ? தேவனா? மனிதனா? கல்லா? மரமா? ஒருபொருளுமில்லையே!

இனி, "இந்து" என்னுஞ் சொல்லுக்குச் சந்திரன் மிருகசீரிடம் முதலியன பொருளாமாயினும் அப்படியுமொருதொடர்பையுங் காணேமே. எவரோ மிலேச்சர்களாலே குறைக்காலியாயம் பற்றித் தங்கள் வசதியின்பொருட்டு வழங்கப்பட்ட பெயரைக் கல்விகேள்விகளில்வல்ல சைவர்களும் பொன்னேபோற் போற்றித் தஞ் சமயத்திற்கு இட்டுச் சிவசப்தம் ஒருங்கே கெட்டதாகிய இந்துமதம் இந்துசமயம் என வழங்குதல் எத்துணைப் பேராச்சரியமாயிருக்கிறது.

சோற்றைச் சோச்சியென்றும், பாலைப் பாச்சியென்றும், யாழ்ப்பாணத்தை யாப்பாணமென்றும் வழங்குதல்போலாயினுமுண்டாமென் றூசாய்ந்து பார்த்தாலும் அப்படியும் ஒன்றுந் தட்டுப்படவில்லை. பின்னர் அறிவிலார் பிதற்றிய பயனில் வெற்றுரையை அறியாமையாற் கொண்டு வழங்கிய அறியாமைச் சமயமன்றி இது வேறொன்றன்று. அவ்விந்துசமயம் என்னும்பெயரானது மேலைத்தேயத்தாராலே நஞ் சைவசமயத்துக் கென்றிடப்பட்ட பெயரேயாக, நாமு மதனை யங்கீகரித்தல் முறையாமாவெனின், அம் மேலைத்தேயத்தவர் நஞ் சைவர்களை "அஞ்ஞானிகள்" (HEATHEN) என்றும், "பேய்வணங்கிகள்" (PAGANS) என்றும் வழங்குதலையும் தலையாகவிசைந்து "நாம் அஞ்ஞானி" "நாம் பேய்வணங்கி" என நம்மைச் சொல்லிக்கொள்ள முன்வருவோமாயின், சைவசமயியாகிய நம்மை இந்துசமயி என வாய்கூசாது சொல்லிக்கொள்ளவும் முன்வருவோம்.

இதுகாறுங் கூறியவாற்றால் இந்துசமய மென்பதோர் சமயமில்லையென்பதும் அங்ஙனமொருவேளை யிருப்பினும் அவ்விந்துசமயத்திற்குஞ் சைவசமயத்துக்கும் யாதொரு தொடர்புமில்லையென்பதும் சைவசமயத்துக்கு இந்துசமயம் எனப் பெயர்தந்து வழங்குவது தகுதியன்றென்பதும் நன்குபுலப்படும். (வரும்.)

## புதுவருடமாகிய நளவருடப்பிறப்பு.

———:0:———

"கீர்திர்களவருஷஞ்சேர்வடக்கிலேகலகம் பாரோர்மடிவர்படைபெழுச்சி—காரோ பொழியாதிரத்தப்புணரிபெருகும் அழியுமரசர்படை"

இவ்வருடமானது "சோதிடபரிபாலன மடத்தாரது வாக்கிய பஞ்சாங்கப்படி, இராக்ஷதஞூ பங்குனிமீ 31உ புதன்கிழமை இரவு 9மணி 40மினிற்றில் வரும் விருச்சிகலக்கினத்திலே ஆயிலிய நக்ஷத்திரத்திலே பிறக்கும்*.

திருக்கணிதத்தின்படி புதன்கிழமையிரவு 11மணி 50மினிற்றிலே தனுசுலக்கினத்திலே ஆயிலிய நக்ஷத்திரத்திலே பிறக்கும்.

*அன்று பகல் 29நாழிகை முதல் இரவு 18½நாழிகைவரையும் விஷு புண்ணியகாலமாகும்.

இந்தப் புண்ணியகாலத்திலே, பூசம், ஆயிலியம், மூலம், பூராடம், உத்தராடம் முதற்கால், கேட்டை, ரேவதி, என்னும் நக்ஷத்திரங்களிலே பிறந்தவர்கள் சங்கிரமதோஷ நிவிர்த்தியின்பொருட்டு, தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சிதேவியார்செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு, என்னு மிவற்றாற் செய்த மருத்துநீர்தேய்த்து ஸ்நானஞ்செய்து நாஞவித வர்ணபட்டுப் பீதாம்பரங்களும் ஆபரணங்களுந் தரித்து அநுஷ்டானுதி செபதபங்களை முடித்து இஷ்டதெய்வங்களையும் குலதெய்வங்களையும் தாய் தந்தை குரு முதலிய பெரியோர்களையும் வணங்கித் தானதருமம் முடித்து சுற்றமித்திரரோடு அறுசுவையுண்டி யருந்திச் சுபகரமாக யாவரும் வாழக்கடவர்.

———

## ஸ்ரீமான். வே. மூ. வேலாயுத பிள்ளையின் கொழும்பு நகரசங்கக் கோட்டபராதம் தள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பிரபலவர்த்தகராகவிருக்கும் ஸ்ரீமான். வே. மூ. வேலாயுதபிள்ளை யவர்கள் கொழும்பிலிருந்து பிளேக்நோயால் பீடிக்கப்பட்ட ஆறுமுகமெனபவருக்கு யாழ்ப்பாணம் வருதற்காய் அரசாங்கத்தவ ருத்தரவின்றி மோட்டர் வண்டியொன்றைப்பிடித்துக் கொடுத்தனரெனக் குற்றஞ்சாட்டி இன்ஸ்பெக்டர் வோரான் நகரசங்கக்கோட்டில் வைத்த வழக்கில் நீதிபதி டி வேலாயுதபிள்ளையைக் குற்றவாளியாய்க்கண்டு 500-ரூபா அபராதம் விதித்தனர். இத்தீர்ப்பு சரியற்றதென வேலாயுதபிள்ளை அப்பீல் கேட்டனர். இவ்வழக்கு அப்பீல்கோட்டில் நியாய உத்தரிப்புக்கு கௌரவ நீதிபதி மெஸ். என்னிஸ் அவர்கள் முன்வந்தபோது வேலாயுதபிள்ளைக்காய் அத்துவக்காத்துமாராகும் மெஸேர்ஷ் பாவாவும், நிசைவீரசிங்கமும் தோற்றிப்பேச வழக்காளிபக்கத்துக்காய் மெஸ். எவ். ஜே. த. சேரம் தோற்றிப்பேசினர்.

அப்பீல்கோட்டு நீதிபதி, தீர்ப்பின் ஈற்றில் பின்வருமாறு:—1-வது எதிரி நோயாளியின் சுற்றத்தவரல்லர்; அல்லது, நோயாளியைத் தெரிந்தருமல்லர்; மரைக்காயரின் புத்தகமொன்றிலாவது எழுதப்பட்டிருக்கவில்லை. கொடுக்கல் வாங்கல் பணமூலமாய் முடிந்தது. 2-வது பிடித்த ஆளை மட்டுக்கட்டியவிஷயத்தில் சாட்சிகள் வழக்காளிபக்கத்துக் கிருக்கும்சார்பிலும் எதிரிபக்கத்துக்கே அதிக சார்புடையனவாயிருக்கின்றன. ஆகையால் எதிரியைக் குற்றவாளியாய்க்கியதை யான் தள்ளுகின்றேன்.

## யுத்தம்.

கற்றிக்காற் நீரிணையில் ஓர் கப்பற்சண்டை நடந்ததாக வதந்தி. ஒரு சேர்மன் உடைகப்பல் பழுதடைந்து கெம்சிங் போர்க்அப்பால் இழுத்துக்கொண்டுபோகப்பட்டது.

வேர்டன் என்னு மிடத்தைச்சுற்றி, சேர்மனியர் இன்னுங் கடும்போர் புரிகின்றனர். பிராஞ்சுக்காரருக்கே ஜெயமாயிருக்கின்றது.

இங்கிலிஸ் பிரதம மந்திரியார் அஸ்குவித் இத்தாலிதேசத்தைத் தரிசித்து, அவுஸ்திரியருக்கும், இத்தாலியருக்கும் சண்டைநடக்கும் எல்லைகளைப் பார்வையிட்டனர். அவர் இத்தாலியருடைய வீரதீரத்தைப்பற்றி மிக வியந்துபேசினர்.

ஏப்பிரல் 5உ ஆங்கில பிரான்சிய மிதப்புக்கப்பல் சேர்மனியரின் கழியோடிக்கப்பலொன்றை கடலில் அமிழ்த்திவிட்டது. அதிலிருந்த உத்தியோகத்தர்களும் கப்பற்காரர்களும் கைதிகளாக்கப்பட்டார்கள்.

ருஷிய எல்லையில் பனி யுருகத்தொடங்கிக்கொண்டது. சேர்மனியர் எதிர்த்துக் கொடூரமான சண்டைசெய்தும் ருஷியரின் வாட்படை அவர்களைத் துரத்திவிட்டார்கள்.

மெசொப்பொற்றேமியாவில் துருக்கிகள் அரண்பண்ணி வைத்திருந்த இடங்களை இங்கிலீசுச்சேனை கைவசமாக்கினுர்கள்.

ஏப்பிரல் 5-ம் 6-ம் திகதிகளில் பின்வருங் கப்பல்கள் சேதமாயின. இங்கிலீசுக்கப்பல் பென்டிபூ. ஸ்பானியகப்பல் விக்கோ, டற்ச்கப்பல் எல்ஜினிக்கெலெனு. இங்கிலீசுக்கப்பல் ஜென்ற், இங்கிலீசுக்கப்பல் ,கிளான்கமெல், நோர்வேப்க்கப்பல், போஸ்.

கருங்கடற் கரையிலே படைக்கப்பற்றுளையோடு ருஷியரின் வல அணியைத் தாக்கினர்கள். அதிக சேதத்தோடு துரத்தப்பட்டார்கள். ருஷியா துருக்கிகளின் நடுஅணியைத் தாக்கி சில இடங்களைக்கைப்பற்றிக்கொண்டார்கள். ரோஷேக் வடபாகத்திலுள்ள மலைகளிலிருந்து துருக்கிகளைத் துரத்தி அந்தஇடங்களையும் பிடித்துக்கொண்டார்கள்.

கருங்கடலில் ஓர் கழியோடிவள்ளம் எல்வென் என்னும் யுத்தக்கப்பலையும், கரிபேற்றிச்சென்ற வேறுசில கப்பல்களையும் உடைத்துவிட்டது. ஓர் யுத்தக்கப்பல் பிளெஸ்லோ என்னும் யுத்தக்கப்பலைத் தாக்கினபோது ஓடிவிட்டது.

சீனவிற் பெரிய கலகம் வரும்போற்றோற்றுகின்றது. சீனவில் தென்பாகத்திலுள்ள "குவான்ரங்" என்னுமோர் செழிப்பான மாகாணம் தன்னிட்ட இராச்சியமாய்விட்டது.

யப்பான் உப்புவரியால் மிஞ்சியிருந்த பத்துலெட்சம் டலர் பணத்தை வங்கியிலிருந்து எடுக்கப்படாதென்று தடுத்துக்கொண்டது. ஆகிலும் ஆங்கில பிரான்சிய வங்குகளும், ருஷிய சேர்மனிய வங்குகளும், பணத்தைக் கொடுக்கத் தடைசெய்யவில்லை.

## கையொப்பவரவு.

| ஸ்ரீ. | ரூ.ச. |
|---|---|
| ,, கே. கனகசிங்கம் மட்டக்களப்பு | 2-00 |
| ,, பி. விசயரத்தினம் ,, | 2-00 |
| ,, எஸ். அந்தோனிப்பிள்ளை ,, | 2-00 |
| ,, எம். சந்தனம்பிள்ளை ,, | 2-00 |
| ,, பி. வீராசாமிப்பிள்ளை ,, | 2-00 |
| ,, எச். பி. ஒற்லோவ் ,, | 2-00 |
| ,, சி. எஸ். ஏரம்பபிள்ளை ,, | 2-00 |
| ,, ஆர். செய்யதுமுகிதீன் ,, | 2-00 |
| ,, வி. பத்தக்குட்டி ,, | 2-00 |
| ,, எஸ். ஜே. சிங்கநாயகம் ,, | 2-00 |
| ,, சி. சுப்பையா ஒப்பாத்தைபெல்ம | 2-00 |
| ,, கே. மாணிக்கம்பிள்ளை சுருட்டுக்கடை பெல்மதுளை | 2-00 |
| ,, சி. வி. தம்பிமுத்து ஒப்பாத்தை | 2-00 |
| ,, சி. மயில்வாகனம் வெல்லத்துறை தோட்டம் | 2-00 |
| ,, எஸ். நடராசா ஒப்பாத்தை | 2-00 |
| ,, எம். பெருமாள் ,, | 2-00 |
| ,, சு. சோ. முருகப்பன் பன்காவலை | 2-00 |
| ,, எஸ். பி. எஸ். வள்ளியப்பன் வெல்லம்துறை | 2-00 |
| ,, ந. மு. கா. பன்காவளைபள்ளிமடுவ | 2-00 |
| ,, எஸ். சின்னத்தம்பி சிவியாதெரு | 75 |
| ,, இ. மயிலு ,, | 1-00 |
| பிரமஸ்ரீ. ஏ. சிவசங்கரதீக்ஷதர் வண் | 1-00 |

## அடைவுநகை விற்பனவு விளம்பரங்கள்.

1893-ம் ஆண்டி எட்டாமிலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் வண்கிழக்கு வை. சண்முகம்பிள்ளையிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி ஷை சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| நம்பர் | மீ. உ. ஆ. | ரூ. ச. | அடைவுவைத்தவர் பெயரும் ஊரும். | அடைவுநகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 2020 | 7—25—14 | 15— 4 | கா. இராமலிங்கம் திருநெல்வேலி | தற்காதோலே சோடி ஒன்று |
| 2093 | 8—12—14 | 25— 4 | க. செல்லப்பா நல்லூர் | கல்முருகு சோடி ஒன்று |
| 2218 | 9— 3—14 | 9— 4 | ஆ. சின்னத்தம்பி திருநெல்வேலி | மோதிரம் மூன்று |
| 2233 | 9— 7—14 | 10— 4 | க. வைரவி தாவடி | குவளைக்கடுக்கன் சோடி ஒன்று |
| 2268 | 9—13—14 | 10— 4 | வை. இராமலிங்கம் வண்கிழக்கு | மோதிரம் ஒன்று |
| 2461 | 10—15—14 | 40— 4 | ஆ. சின்னத்தம்பி திருநெல்வேலி | கல்மோதிரம் ஒன்று பச்சைக்காப்பு சோடிஒன்று |
| 2606 | 11—10—14 | 10— 4 | சி. கதிரன் ஆனைப்பந்தியடி | திருகுபூ ஒன்று |
| 2627 | 11—15—14 | 45— 4 | ப. பொன்னம்பலம் திருநெல்வேலி | கம்பிஅட்டியல் ஒன்று |
| 2685 | 11—26—14 | 40— 4 | க. துரையப்பா வண்கிழக்கு | சரட்டட்டியல் ஒன்று பதக்கத்துடன் |
| 2706 | 11—30—14 | 35— 4 | சி. செல்லையா வண்கிழக்கு | சங்கிலி ஒன்று மோதிரம் ஒன்று |
| 2720 | 12— 3—14 | 18— 4 | கா. இளையதம்பி வண்கிழக்கு | அரும்புமணிக்கோர்வை ஒன்று |
| 2778 | 12—16—14 | 10— 4 | வே. கிட்டுனு வண்கிழக்கு | பின்கோர்க்கி ஒன்று |
| 2785 | 12—17—14 | 20— 4 | மு. கண. தி சிவியாதெரு | காப்புச்சோடி ஒன்று |
| 2837 | 12—26—14 | 7—54 | வே. கார்த்திகேசு சேனியதெரு | காட்டுக்கடுக்கன்சோடி ஒன்று தாயித்து2 |
| 3102 | 2—10—15 | 8— 4 | பொ. செல்வம் சேனியதெரு | அரைமூடி ஒன்று |
| 3109 | 2—12—15 | 10— 4 | கா. காசியா வண்கிழக்கு | தற்காதோலே சோடி ஒன்று |
| 3129 | 2—15—15 | 20— 4 | பொ. செல்வம் சேனியதெரு | பூ 1 பதக்கம் 1 கடுக்கன் சோடி ஒன்று |
| 3155 | 2—20—15 | 34— 4 | த. செல்லப்பா நல்லூர் | தற்காதோலே சோடி 1 மோதிரம் 1 பிலாக்கு 1 |
| 3156 | 2—20—15 | 17— 4 | த. செல்லப்பா நல்லூர் | பாதசரம் ஒன்று கல்காரி சோடி ஒன்று |
| 3178 | 2—23—15 | 30— 4 | ச. சின்னதம்பி வண்கிழக்கு | தற்காதோலே சோடி ஒன்று |
| 3205 | 2—27—15 | 22— 4 | சி. ஐயாத்துரை வண்கிழக்கு | சலங்கைக்கோர்வை ஒன்று |
| 3245 | 3— 7—15 | 6— 4 | கா. முத்துக்குமாரு திருநெல்வேலி | அரைஞாண் ஒன்று |

விற்பனவு—1916ஞூ மேமீ 13உக்குச் சரியாய் நிகழும் நளஞூ சித்திரைமீ 31உ சனிக்கிழமை பகல் பத்துமணியளவில் ஷை பிள்ளையவர்களின் வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார் வெத்தில்மேஸ்தர்.



## விளம்பரம்.

ஸ்ரீமத் கா. கந்தையாபிள்ளை

அவர்களியற்றிய

## சங்கீதத் திரட்டு

இரண்டாம்பாகம்.

வெளியாகிவிட்டது!

வெளியாகிவிட்டது!!

இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் பாட்டுகள் யாவும் புதிய பிளேட்டுகளிலிருந்து எடுக்கப்பட்டன. தென்பாங்கு, வேடிக்கைப் பாட்டுகள், தேவார திருவாசகங்கள் வேண்டியன அடங்கியிருக்கின்றன.

விலை பிரதி ஒன்றுக்கு ரிங்கி 1—00.
தபால் கூலி 15.

## சங்கீதத்திரட்டு

முதற்பாகம்.

இதுவும் இரண்டாம் முறையாகத் திருத்திப் பதிப்பித்தோம்.

விலை பிரதி ஒன்றுக்கு ரிங்கி 1—00.
தபால் கூலி 15.

## சித்தாந்த ரத்நாகரம்.

இவ் வரிய பெயர்புனைந்து இற்றைக்குப் 15-வருடங்கட்கு முன்னர் சென்னை-ஞ ஞானசோமசுந்தரநாயக ரவர்களால் வெளியிடப் பட்ட நூல்கள் பல. இவர் வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் என்னும் காரணப்பெயர் பெற்றோர். இந் நூல்களைப் படிப்போர் சைவசமயத்தின் உண்மைகளைத் தெளிவாயறிந்து கொள்ளும் இயல்புடைய ராவர். பிறமதப் பிரவேசஞ்செய்ய அஞ்சுவர்.

1—ஆசாரியப்பிரபாவம் 1-50.

இது நால்வர்சமயாசாரியர்களின் அவதாரத்தைப் பற்றிச் சொல்லிவரும்போதில் அவர்கள் ஏனையோரைப்போல் கருக்குழியில் புகுந்து வந்தவர்களல்ல வென்பதை விளக்கிக்காட்டும். ஆசாரிய சுவாமிகளின் பெருமையையும் வியந்துபேசும். ஒவ் வொருவரும் வாசித்தறியவேண்டிய நூல் இதுவாகும்.

2—சிவபாரம்யப்பிரதரிசினி 75 சேன்ட்.

இந் நூலிலே சிவபெருமானுக்குப் பிறமதத்தவர்கள் கூறுங் குற்றங்களுக்குப் பிரபல நியாயங் காட்டப்பட்டு ஒவ் வொன்றும் விரிவாய் மறுத்திருப்பது தோற்றும்.

3-சுக்லாம்பிரதாசலோகவிசாரம் 50 சேன்ட்.

இதில் பஞ்சாட்சரத்தின் மகிமை விளக்கப்பட் டிருக்கின்றது.

☞ வேண்வோர் அடியிற் கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

இந்தியா, இலங்கைக்கு வி. பி. சட்டம் இல்லை.

முற்பணம் அனுப்பினுல், தபாற்கூலி இலும்.

**C. CANDIAH PILLAI**
**PROPRIETOR**
KLANG PRINTING WORKS
**KLANG.**

**நமது "சண்முகநாதன்" மீது அபிமானங் கொண்டு அவ் வப் பத்திராதிபர்களினலே நமக்கு அனுப்பப்பட்டு வரும் பத்திரிகைகளாவன.**

யாழ்ப்பாணம்,
"சிலோன் பேற்றியற்."
"சத்தியவேத பாதுகாவலன்."
கோக்குவில்,
"விஜயபானு."
திருநெல்வேலி,
"மஹா விஜயலட்சுமி."
அச்சுவேலி,
"சன்மார்க்கபோதினி."
வயாவிளான்,
"சுதேசநாட்டியம்."
வட்டுநகர்,
"சைவபாலிய சம்போதினி."
வேலணை,
"சைவகுருக்குமார்த்த போதினி."
கொழும்பு,
"முஸ்லீம்நேசன்."
சென்னை,
"லோகோபகாரி."
"பாரதி".
"விச்சுவகர்மன்."
"விச்சுவகர்ம குலோபகாரி."
"கலாசிந்தாமணி."
"முகம்மதிய்யாபிரசங்கநேசன்."
மதுரை,
"விவேகோதயம்"
கும்பகோணம்,
"யதார்த்தவசனி."
நாகபட்டணம்,
"செந்தமிழ்ச்செல்வி."
புதுவை,
"இந்தியன் அட்வர்ட்டைஸர்."
"சகாபிவிருத்தினி."
"கலைமகள்."
திரிச்சிராப்பள்ளி.
"பிரஜாநுகூலன்."
டர்பன்,
"விவேகபானு."
தஞ்சை,
"வர்த்தகமித்ரன்"
இந்தியா,
"திராவிடாபிமானி."
திருவாரூர்,
"கமலாஸனி."
என்பனவைகளாம்.

மேற் குறித்த பத்திரிகைகளை நமக் கனுப்பிக்கொண்டுவரும் பத்திராசிரியர்களுக்கு, நாமும் நமது பத்திரிகையைக் கிரமமாக அனுப்பிக்கொண்டு வருவோம்.

## சமாசாரங்கள்.

காலநிலை:—"பங்குனிமாதம் பகல்வழிநடப்பவனைப் பார்த்திருந்தாலும் பாவம்" என்னும் பழமொழிப்படி, வெயி லகோரம் தாங்கமுடியவில்லை. சின்னமுத்து கொப்பளிப்பான் முதலிய நோய்கள் வசாடுகின்றன.

கஞ்சாவைத்திருந்தவர் அபராதம் விதிக்கப்பட்டார்:—வண்ணார்பண்ணையிலே சுதேசவைத்தியம் நடத்தும் ஸ்ரீ. கே சின்னையா வென்பவர் கஞ்சாவைத்திருந்தாரென்னும் குற்றச்சாட்டின்பேரில் விளங்கப்பட்டு 250-ருபா அபராதம் விதிக்கப்பட்டார். இவர் முன்னும் இவ்வித குற்றத்துக் குள்ளாகி அபராதம் விதிக்கப்பட்டவர்.

பிறக்றர்ப் பரீக்ஷை:—இப் பரீட்சைக்குப் போனவர்களுள், மத்திய பரீட்சையில் பதினன்குபேரும், கடைசிப் பரீட்சையில் பத்தொன்பதுபேரும் அரங்கேறினர். மத்திய பரீட்சையில் அரங்கேறினேருள், பிறக்றர் ஸ்ரீமாந். வி. காசிப்பிள்ளை அவர்களின் மருகர் ஸ்ரீ. ஆர். சுப்பிரமணியம் ஒருவர். கடைசிப்பரீட்சையில் அரங்கேறினேருள் மெஸ். திருச்செல்வம் தம்பிமுத்துவின் புத்திரன் மெஸ். ஜே. என். சி. திருச்செல்வ மொருவர்.

தூங்கியிறத்தல்—சென்றவாரம் வண்ணார்பண்ணைக்குச் சமீபமாயிருக்கும் வில்லூன்றிமடத்தில் யாரோ ஒருவன் தூங்கியிறந்தனன். யாதுகாரணம்பற்றியெனப் பொலீசர் விசாரணைசெய்கின்றனர்.

நீரிலமிழ்ந்தியிறத்தல்:—சென்ற புதன்கிழமைகாலமே, கன்னுதிட்டிக் குளத்தில் ஒரு சிறு பெண்பிள்ளை பூப்பறித்தற்காகக் குளத்திலிறங்கித் தாமரைக்கொடியிற் சிக்குண்டு உயிர்துறந்தனள். குளத்திற்கருகே பிள்ளைகளை விடாதிருப்பது பெற்றோர்கடனேயாம்.

ஞானசங்கிரகத் திறவுகோல்:—முதற்பாகம் இது சாசாலைவாசரும், ஆயுள்வேத வைத்திபருமான ஸ்ரீ. சி. வைத்தியலிங்கம் அவர்களால் இயற்றப்பெற்றுள்ளது. இந்நூல் ஞானமார்க்கத்தை யடைதற்கேற்ற வழி வகைகளை நன்கு விளக்குகின்றது. இதன் ஆக்கியோன், அனேக நூல்களின் சாரத்தை எவரும் சுட்சமா யுணரத்தக்கவிதமாக, இச்சிறுநூலி லடக்கி எழுதியிருக்கின்றனர். இது ஞானமார்க்கத்தை யடைய விரும்புவோர்க் கின்றியமையாத ஒருநூலாகும். இதன்விலை 4-அணு. நமக் கனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

சங்கீதத்திரட்டு முதலாம்பாகமும் இரண்டாம்பாகமும்:—இவை, ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களின் மாணாக்கரின் மாணாக்கரி லொருவராகிய, யாழ்ப்பாணம் ஸ்ரீமத் கா. கந்தையபிள்ளை அவர்களால், கிளாங்கிலுள்ள தமது அச்சியந்திரசாலையில், அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இஃது, "கிருமவோன்" பாடுவோர்களுக்கும், சங்கீதங்கற்போர்களுக்கும் மிக அருமைவாய்ந்த நூலேயாம். இதன் விலை புத்தகமொன்றுக்கு நிங்கி-1. தபால்சார்சு பிரத்தியேகம். ஷை சங்கீதத்திரட்டுகள் வேண்டுவோர் ஆக்கியோனிடம் பெற்றுக்கொள்ளலாம். நமக் கனுப்பிய பிரதிகளுக்காக ஸ்துதி கூறுகின்றோம்.

இராமேஸ்வரமான்மியம்:—இது, இந்துகலாவிருத்திச் சங்கத்தாரின் கேள்விப்படி, வட்டுநகர் பிரமஸ்ரீ. சி. பாலசுப்ரமண்யஐயர் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் இராமேஸ்வரத்தின் கண்ணுள்ள விசேஷ தீர்த்தங்களின் விசேஷ குணங்களைச் சுருக்கிக் கூறுகின்றது. தலயாத்திரை செய்பவர்களுக்கு இந்நூல் பெரும் உபயோகமாகும். நமக் கனுப்பிய பிரதியை மகிழ்ந்தேற்றும்.

இலங்கைப் பூமிசாத்திரம்:—(வடமாகாணம் விரிவாய்) நாலாந்தரத்துக்காக, உபவித்தியாதரிசி, ஸ்ரீ. அ. பொன்னையா அவர்கள் செய்தது. விலை சதம்–25. பொதுவாய் யாழ்ப்பாணத்தேயுள்ள வித்தியாசாலைகளில் இலங்கைப்பூமிசாஸ்திரம் கற்பிக்கவேண்டியமுறையாய் கற்பிக்கப்படுவதில்லை. இதற்கு விசேஷகாரணங்களாயுள்ளவற்றுள் ஒன்று தக்கபுத்தகம் இதுவரையும் வெளிவராமையாம். இப்பெருங் குறையை ஸ்ரீ. அ. பொன்னையா அவர்கள் செய்த இலங்கைப்பூமிசாஸ்திரம் நிவிர்த்திசெய்கின்றது. இப்புத்தகம், இனிய செந்தமிழ்நடையில், சாத்திரசம்பந்தமாயும், மாணவர்மனதில் இலகுவிற் பதியத் தக்கவிதமாயும் எழுதப்பட்டுள்ளது. வித்தியாசாலை அதிகாரிகள் ஷை புத்தகத்தையே இனிமேல் தங்களுக்குக் கீழுள்ள மாணவகர்கள் பாவிக்கும்படி செய்வார்களென்று எண்ணுகிறோம். நமக் கனுப்பிய பிரதியை உவந்தேற்றும்.

பள்ளிவாசல் கலகம்:—பண்டைக்காலத்து முஸ்லீம்கள் பந்திபோசனஞ்செய்யக்கூடியவர்களை விவாகஞ்செய்து ஒழுங்காய் நடந்துவந்தார்கள். தற்கால முஸ்லீம்களில் சிலர் பந்திபோசனஞ் செய்யத் தகமை யில்லாதவர்களை விவாகஞ் செய்ததினால், அது ஆகாதென்ற கனவான்களோடு சென்றவாரம் முஸ்லீம் பெரியபள்ளிவாசலில் கலகம்நடந்தது. ஆறுமென் றதகடி பேசினவர்கள் அடிபட் டுடைபட்டுப் பிடிபட்டனர். க—ம்.

தேரையர்கரிசலை, முந்நூறும், கல்நண்டு சூத்திரமும்:—இவை, ஆயுள்வேத பண்டிதராகிய V. R. சுந்தரம் அவர்களால், தஞ்சை அரண்மனை சரஸ்வதிமாலிலுள்ள ஏட்டுப்பிரதியைக்கொண்டு இயற்றப்பட்டன. இந்நூல் வைத்தியர்களுக்கு மிகப் பிரயோசனமுடையதாயிருக்கும் தமிழில் பாண்டித்தியம் படைத்தவர்களே இந்நூலை எளிதில் விளங்குவார்கள். ஷை நூலாசிரியர் ஷை நூலிலுள்ள அரும்பதங்களை, சாமானியமனுஷர் தாமு மறியத்தக்கவிதமாக, விளக்குதல் மிக நன்றாம். எனெனில், தற்கால வைத்தியர்கள் அரும்பதங்களை தம்மனம் போனவாறு திரித்துப்பொருள்செய்வதினல் பெருங் கேடுகளை விளைக்கின்றனர். நமக்கனுப்பிய பிரதியை உவந்தேற்றும்.

இராமநாதவித்தியாலயம்:—இவ்வித்தியாலயத்திலே இந்தமாதம் 6-ந் தேதி வியாழக்கிழமையன்று வருடப்பிறப்புக் கொண்டாட்டத்தினிமித்தம் விடுதலை விடப்பட்டது. மே மீ 5உ திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

வைத்தீஸ்வர வித்தியாலயம்:—இவ் வித்தியாலத்திலே இந்த மாதம் 11-ந் தேதி செவ்வாய்க்கிழமை விடுதலை விடப்பட்டு மே மீ 5உ ஆரம்பமாகும்.

## கடிதம்.

[கடிதக்காரர் அபிப்பிராயங் கட்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.]

### கடிதோத்தரம்.

—(:0:)—

"தும்பைநகர்ச் சுப்பிரமணிய சாஸ்திரிகளின் கந்தபுராண வியாக்கியான ரசாபாசதர்ப்பணம்" என்னுங் கடிதமும், "தும்பைநகர்ப் பஞ்சாங்க ஆபாசவிளக்கம்" என்னுங் கடிதமும் பெற்றோம். இடம்பெறுமையின் இம்முறை நிறுத்தப்பட்டன. வரும் பத்திரிகையில் வெளிப்படுத்தப்படும். கடிதர் குல்நகூறுதிருப்பாராக.

ப—ர்.

### யாழ்ப்பாணச் சைவசித்தாந்த சமாசத்தார் சமூகத்திற்கோர் விண்ணப்பம்

ஐயன்மீர்!

இப்பொழுது சிலவருடங்களாக நடைபெற்றுவருவதாகிய "சைவசித்சாந்த மகாசமாசத்தின் அங்கத்தவர்களும் காரியதரிசிகளுமாகிய தாங்கள் யாழ்ப்பாணத்துச் சைவசமயிகளாகிய எங்களுக்குச் செய்த கைம்மாறுக்குதாநன்றி என்றும் மறக்கப்படுவதன்று. இப்பெரும் புண்ணியச்செயலானது நாளடைவிற் பெரும்பயன் தருமென்பதிற் சிறிதுந்தடையில்லை. எனினும் யாழ்ப்பாணத்துப் பற்பல திசைகளிலும் வசிக்கும் சமாச அங்கத்தவர்களாயுள்ளோர் யாவரும் தாம்தாம்வசிக்கு மூர்களிலே மாதந்தோறும் ஒவ்வொரு சைவ சித்தாந்தப் பிரசங்கம் நடாத்திவர்தால் மிக நன்மையாயிருக்கும். அங்ஙனஞ் செய்வது அங்கத்தினர் பலர்க்கு மிக விருப்பம் என்பது நன்குரையமிவேன். ஆனல் அவர்கள் தங்களை யேவிடைத்தும் ஓர் வல்லுனனை யெதிர்பார்த்திருக்கிறார்கள். ஆதவால் இத்துணைப்பெருந் தருமத்தைத் தாமாகவே யதிப்ராயத்தோடு நடாத்திவரும் பெருந்தகைமைவாய்ந்த ஷை சமாச காரியதரிசி யவர்களே முன்னின்று எவுதற்கருத்தாவாயிருந்து வூர்தோறும் மாசந்தோறும் ஒவ்வொரு பிரசங்கஞ் செய்வித்து எம்போல்வாரையெல்லாம் நன்னிலையிற் செலுத்துமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
ஓர் சைவன்.

### சிலபஞ்சாங்க வினக்கள்.

இங்கே வினவப்படும் வினக்களுக்கு விடையிறுக்கும் கடப்பாடுடையவர் சுங்கானை அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்ட "ஸவருஷ சுத்தவாக்கிய பஞ்சாங்க" ஆக்கியோனவர்களே யாதலின், அவர்களாவது ஷை பஞ்சாங்க விருத்திபைநாடிய மற்றைய பெரியோராவது உலகோபகாரமாக விடையளிப்பார்களென்னும் பூரணநம்பிக்கையுடன் இக் கேள்விகளைப் பொறிக்கலாயினேன்.

ஷை பஞ்சாங்கம் எவ்வூரை மத்தியநாடியாகக்கொண்டு கணிக்கப்பட்டது? ஷை பஞ்சாங்கம் தனியே உபயோகப்படக் கூடியதா? இன்னோர் பஞ்சாங்கத்துடன் உபயோகப்படக் கூடியதா? பகல்நாழிகையறிய விதிகூறியவர் ஷை நாழிகையறிவதற்கு ஆவசியகம் வேண்டப்படுவதாகிய பகல்மானத்தை யாவது பகல்மானங் கணிக்கும் விதியையாவது கூருததென்ன? மற்றைய வாக்கிய பஞ்சாங்கங்களிலுள்ள கிரகசாரங்களும் ஷை பஞ்சாங்கத்திலுள்ள கிரகசாரங்களும் சுமார் 20-நாழிகைவரை வித்தியாசப்படக் காரணமென்ன? பஞ்சாங்க திணசுத்தி உதயாற்பரம் முதலியனவும் வித்தியாசப்படக் காரணமென்ன?

இங்ஙனம்,
சோதிட வித்தியார்த்தி,
காரை, 28—3—1916.

### இணுவில்வாசிகளும் வித்தியா விரோதிகளும்.

—:0:—

பிரசித்திபெற்ற தமிழ்வித்துவானு யிருந்து காலஞ்சென்ற இணுவில் ஸ்ரீ. அம்பிகைபாக உபாத்தியாயரவர்களது புத்திரராகிய ஸ்ரீ. வைத்தியலிங்கபிள்ளை யவர்களாலே நடாத்தப்படுவதாகிய சைவத் தமிழ்ப்பாடசாலையொன்று இவ்விணுவிலிலேயுண்டு. அதற்கு அரசினருதவி நன்கொடையுமுண்டு. பிள்ளையவர்கள் அதனை மிகக் கிரமமாகப்பரிபாலித்து வருகிறார்கள். பிள்ளைகளுந் தொகையாய்ப் படித்துவந்தார்கள். இவை யெல்லாமிங்ஙனமாக பிள்ளையவர்களிடத்திற் கொண்ட அழுக்காறு காரணமாக அவ்வித்தியாசாலையைக் கெடுக்கும் நோக்கத்தோடு ஷை வித்தியாசாலைக்கு முரிவு வந்த தென்றும் விழுந்துவிட்ட தென்றும் பொய்க்கதை யொன்றை யுண்டுபண்ணி யூரிற்பரப்பிச் சனங்களை வஞ்சித்துப் அவ் வித்தியாசாலைப் பிள்ளைகளை யெல்லாந் திருப்பி மடத்திலே யடைத்துக்கொண்டு சில உபாத்திமாரும், பிறரும் இராக்காலங்களிலே பாட்டுக்கச்சேரியும் வைத்துக் காலங்கழிக்கிறார்களே. யார் கை கொத்தினும் தகைகை வாழவேண்டுமென்று அவர்கள் பிள்ளைகளை வஞ்சித்திழுத்தாலும் இவ்வூரிலே நீதியாயர் தெரிந்த அறிஞர் ஒருவராவ தில்லையா? சண்முகநாதனே முற்பட்டு இவர்களுக்குத் தண்டஞ் செய்வ தென்பதற்குத் தடை யுண்டா?

இங்ஙனம்,
இணுவையான்.

### பாரிசாதத்தினுபயோகம்.

—(:0:)—

பாரிசாதமானது ஒரு மரம்போல் வளரக்கூடிய சிறு செடி. அதன் இலைகள் வட்டவடிவாயும், அதன் புஷ்பங்கள் காம்புபவளம்போற் சிவந்து உடல் வெளுத்து நறுமணத்தோடு கூடியதாயிருக்கும். எந்தக்காலமும் அது பூக்குங் குணமுள்ளது. இதனை நம்மவர்கள் பவளமல்லிகை என்பார்கள். சிவாலயங்களிலும் நந்தனவனங்களிலும் இதனை வைத்தண்டுபண்ணுவார்கள். இது வைத்தியத்தில் மிக மேலானமூலிகையாகக் கருதப்படும். இதன் இலைகளைக் காய்ச்சலுக்கும் ஆமவாதரோகத்துக்கும் மருந்தாக உபயோகிக்கலாம். எப்படியென்றால் ஏழெட்டுக் குருத்திலைகளையும் இஞ்சியையும் சிறிது சலம்விட்டுஅட்டி விடாது வருத்துகின்ற முறைக்காய்ச்சல் வியாதியில் உட்கொள்ளலாம். இதற்கு மாமிசபோசனங் கூடாது. இதன் இலைகளைத் தண்ணீரோடுகலந்து கமலாக்கினி யெனனும் நக்ஷத்ரமான குட்டியிலே கஷாயமாக வேகவைத்து கிருத்திர சிவாதம் என்னும் ரோகத்தினுல் வருந்தும் பிணியாளிக்குக் கொடுத்தால் ஆதவனைக்கண்டபனிபோல் அடியோடு அற்றுப்போகும். இதன் பட்டையை ஐந்துநெல்லெடையளவு எடுத்து தாம்பூலத்தோடு சேர்த்து மென்று விழுங்கினல் மார்பிலே கனமாயிருக்கும் கபத்தைக் கரைத்து மிருதுவாக வெளிப்படுத்தும் இதன் வித்துக்கள் இலைபோல் ஒட்டிக்கொண்டு இருக்கும். அவ் வித்துக்களைத் தினக்கிச் சிரசினிலும், வேறு வகைகளாலும் மயிர் உதிர்கின்ற அவலக்ஷணத் நிலையிலே தாவினல் மிக்க நன்மையுண்டாகும் என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

பன்கிழங்கைத் தானும் பதத்துக்குச் சுட்டெடுக்கத் தெரியாத சற்றுக்குட்டிக ளெல்லாம் பரியாரியென்று பெயர் வைத்துக்கொண்டு மாதம் நீற்றினேன் வககம்நீற்றினேன் தங்கம்நீற்றினேன என்று சனங்களை வஞ்சித்துத் திரிகின்ற இக்காலத்தில் சனங்கள் தாமாகவே யறிந்து நடேறுமாறுக நமது பிரிராச்சிதமாக உள்ள எட்டுப் பிரதிகளை இனமாகப் பார்க்கும்படி நமது மாலில் வைத்திருக்கின்றேன். இன்னும் பதார்த்தங்களின் குண குணங்களை இப்பத்திரிகை மூலமாக அறிய வெளியிடவெண்ணியிருக்கின்றேன். யாதாயினும் பதார்த்தவிஷய சந்தேகங்க ளிருந்தால் இப்பத்திரிகை மூலமாக நம்மிடம் வினவினல் தக்கவிடை யிறுக்கப்படும்.

இங்ஙனம்,
M. V.
மனேச்சர்,
தன்வந்திரிமால்,
தற்பொக்கண,
அக்கிரகாரம்.

## ஓர் துக்கசம்பவம்.

சித்தாந்தவித்தைசைவசித்தாந்தப்பிரசாரகரும், சைவ உதயபானுப் பத்திராதிபருமாகிய நல்லூர் ஸ்ரீமத். ச. சரவணமுத்துப்புலவரவர்கள் சென்ற மாசி மீ 20உ வெள்ளிக்கிழமை யன்று பகல் 2-மணிக்கு இடரொன்றுற்ற, சோய்காரணமாய் மூன்று நாலுநாளைக்குள், இவ்வுலகவாழ்வை நீத்தனரென்னும் செய்தியானது, பெருந் துக்கத்துக்கிடமானதே. இவரோசெந்தமிழ்க்கலாவிநோதரும் சிவஞானபோதஞ், சித்தியார் முதலிய சைவசமய சாத்திரங்களிற் பெரிதுபயின்று, எவர்களும் ஆச்சரியமுற்று ஆனந்திக்குமாறு பிரசங்கித்தும், ஐயந்திரிபறமாணவர்கட்குக்கற்பித்தும், தமக் கொப்பாரிலரெனப் பெரிதும் புகழ்படைத்தவர்; இலக்கண இலக்கியவழியாற்றலிலு மிணையற்றவர். சைவஉதயபானு வென்னும் பத்திரிகைக்கு நெடுங்காலம், ஆசிரியராயிருந்து அரிய பெரிய விஷயங்களைத் தானஞ்செய்து இத் தமிழுலகிற்கு நன்குபகரித்தவர்; சமயசாத்திரங்களை ஆராய்தலையே பொழுதுபோக்காய்த் தம்வாழுநாளை ஒப்புக்கொடுத்த உத்தமிலர்; சைவாசார சீலம் பெரிதுடைய நாயன்மார் நெறிப்பட வொழுகிக்காட்டிய புத்திமான். மேன்மக்களால் நன்குபசரித்துப் போற்றிய பெருந்தமிழ்க்குரிசில். யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் சண்முகநாதனென்னும் இறந்த தமிழ்ப்பத்திரிகையிற் சென்ற சிறிதுகாலமாய் "கலிகாலவிபரீதம்" என்னும் தலையங்கத்தின் கீழாகப், "போலிநாகரிகம், போலிமரியாதை, போலிச்சைவர்கள், போலிவேதாந்தம், பெண்களதுவிபரீதநடை, சிறுவர்களதுவிபரீதநடை" முதலிய சுதேசத்திற்கு அத்தியாவசியகம் வேண்டற்பாலதாகிய விபரீத நாகரிக வொழுக்கங்களைக் கண்டித்து, நல்லொழுக்கநெறியைக் கடைப்பிடித்துப் பூர்வாசார உத்தம சன்மார்க்கங்களை ஆதரிக்குமாறு தூண்டி எழுதிய அற்புதவசனசித்கம்; இவர்களது வசனநடையின் செம்பீரமும், விழுமையும், ஆற்றலும், சுவையும் வாசிக்குமெவர்கள துள்ளங்களையு முருக்கி யீர்த்து வழிப்படுத்தாதிரா. எவ்விதம் புகழ்ந்தெழுதினும் அவ்வளவிற்கெல்லா மிலக்கேயாயுள்ள அரியவோர் தமிழ்ப்புலவனும், ஆங்கிலபாஷாவித்பன்னராயுள்ள இவ்வித்துவானை நம்யாழ்ப்பாணநாடு இழந்ததுக்கம் ஆற்றொணுத் கவலைக்கிடனுயிருக்குமெனபதிற் சிறிது மையப்பாடின்றாம்.

### வெண்பா.

கூறு மிராட்சதத்திற் கும்பமதி பின்பதினைத்
தேறுபுகர் தேதி யிருபதே—வீறுகலை
யாயுஞ் சரவணமுத் தாசிரிய னீசனடி
தோயுந் தினமீ துறும்.

### அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

அருள்வழியுஞ் செழுஞ்சைவ சித்தாந்தத் தரும்
பொருளை யருமையான
பொருள்வழியும் பிரசங்கப்புனித வுபதேசத்தாற்
பூமியெங்கு
மருள்வழியை மாற்றிவந்த வண்மையைப்போ ல
வானுலகில் வழங்கவேணடித்
தெருள்வழியுஞ் சரவணமுத் தாரியனே சென்று
யோ செப்புவாயே
தென்னமிர்த தாரையெனத் தேனமிர்த தாரையெ
னத் தித்திப்பான
வெள்ளைநிறப் பாலென்ன வித்துவ ரெத்தினங்க
ளெலாம் வியக்கும்வண்ணங்
கொள்ளைகொள்ளை யாயுதவும் பிரசங்க மென்று
கொலோ குவிரக் கேட்போம்
விள்ளரிய தமிழரசே சரவணமுத் தாரியனே விள
ம்புவாயே
நீதியினுஞ் சமயநெறி நிலைநாட்டு முறைதனினு மே
ர்த்தவாறு
பூதிசெயும் வன்மையினும் புகழ்நிறைந்த புலமை
யினும் பொருவிலாத
சாதுரியத் தன்மையினுஞ் சாத்திரவாராய்ச்சியினுந்
தக் கோய் நின்னை
மீதலத்தார் விரும்பினரோ பூதலத்தோர் நினைந்
திரங்க மேற்சென்றயோ
சித்தாந்த வல்லுநராய்ச் சில்லோரைக் கண்டிருப்
போந் தெரிந்த மட்டும்
வித்தாந்த மாயெடுத்து விளம்புவரப் புலவரைப்
போலவினை வாதின்றிச்
சுத்தாத்து விதசைவ சித்தாந்தப் பொருளையந் தி
ரிபின்றாக
வெத்தாலுஞ் சிறப்புரை சரவணமுத் துப்புலவா
வெங்குற்றாயே
இத்தரையிற் றமிழோங்க வெழிலாருஞ் சித்தாந்த
சைவமோங்க
வுத்தமர்கள் மனமோங்க வொண்புலவர் கிளைங்தே
ங்க வொளிசேர் நீறும்
சுத்திசெயும் வெண்துகு மௌனிருமைந்து நின்றே
ங்கத் தவகை நீத்து
அத்தியுரி யரனடிசேர் சரவணமுத் துப்புலவா வ
ருட்கோமானே.

### வெண்பா.

வந்த விராட்சதப் பேர்வற்சரமே நின்னுமன்
தந்த பொருடன்னையே தாபித்தாய்—விந்தையிலே
ஐயன் சரவணமுத் தாசிரியனைக் கொன்றனையே
ஐயோ விதென்ன கொடுமை.

இங்ஙனம்,
அப்புலவரவர்களது நண்பர்களி லொருவராகிய
நே. வை. செல்லையா,
பெருமாள்கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

## இராமநாதவித்தியாலய மாட்சியும் மகாமகோபாத்தியாயினி மாதுஸ்ரீ. எமறியம்மையா ரவர்களுக்குச் செய்த உபசரணைக் கொண்டாட்டக் காட்சியும்.

:0:

இராமநாத வித்தியாலய ஆரம்பகாலமுதல் இதுவரையும் மகாமகோபாத்தியாயினியாக விருந்து மிக்க திறமையோடு அதனைப் பரிபாலித்தவரும், மேலைத்தேசமே தமது சென்மஸ்தானமாயிருந்தும் விபூதி ருத்திராக்ஷ முதலிய சிவசின்னங்களையே பேரணிகலனுக் கொண்டவரும் சிவஞானபோத முதலிய சித்தாந்தசாத்திரப்பயிற்சி பெரிதுடையவரும், வித்தியாலயத்தை இவ்வளவு நன்னிலைக்குக் கொணர்ந்தவரும், ஆகிய மாதுஸ்ரீ. எமறியம்மையாரவர்கள் தமதுத்தியோகப்பொறுப்பை லண்டன் சர்வகலாசாலை பீ. ஏ. பட்டதாரியும் கேம்பிறிட்ஜ் ஆசிரியத்துவப்பயிற்சித் திறமையுடையவருமாகிய ஸ்ரீமதி, மேபல் அகஸ்டா நீதம் என்பவரிடத்து ஒப்பித்து இளைப்பாறுதலைக்குறித்து உபசரணைசெய்வதற்காக எங்கள் கௌரவ ஸ்ரீ. பொ. இராமநாதனவர்களும் பாரியாரும் மனமுவந்து விடுத்த அழைப்புப்பத்திரத்திற் கண்டபடி சென்ற மார்ச்சு மீ 11உ சனிக்கிழமையிற்பகல் நாலரைமணியளவிலே யாழ்ப்பாணத்து நாலுதிசைகளிலுமுள்ள பிரபுக்கள் உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பண்டிதர்கள், குமார், பத்திராதிபர்கள் முதலாயினோரும் வித்தியாலயத்துப் பிள்ளைகளின் பெற்றோர்களும், பெரும்பான்மை தம்பதிகளாகவே வில்லுவண்டி, கட்டைவண்டி முதலிய மாட்டுவண்டிகளிலுங் குதிரைவண்டி, றிக்ஷோ எனனும் மனுடவண்டி, மோட்டர்வண்டி, சைக்கிள் முதலிய வாகனரூடர்களாகவும் நானாவித ஆடையாபரணாலங்கிர்தர்களாகவும் திரள்திரளாக வந்து வித்தியாலயத்தில் இடமில்லையென்னும்படி குழுமினார்கள். இவருள்ளே பன்னூற்றுக்கணக்கானோர் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னே வந்துவிட்டாராகலின் தங்காலத்தை அவமே கழியாது சற்காலக்ஷேபஞ் செய்வாராயினர்.

எவ்வாறெனில் ஆடவருள்ளே சிலர் சுந்தர வனம்பார்த் தகமகிழ்ந்தார்கள். சிலர் வித்தியாலயக் கட்டடத்தின் அமைப்பையும் தோற்றத்தையும் வெளியிலேநின்று கண்டுகளித்தார்கள். பெண்களுள்ளே சிலர் உப்பரிகையின்கண்ணே யமைக்கப்பட்ட விசித்திரவிமானக் கோயிலின்கண்ணெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத ஸ்ரீநடராசப்பிரானைத் தரிசித்து வணங்கினார்கள். சிலர் அங்கேதொங்கும் படங்களைக்கண்டு வியந்தனர். சிலர் அட்டிற்சாலைக்கு விரைந்து பார்த்தனர். சிலர் அங்கேவசிக்கும் பிள்ளைகளோடு உறவுமுறை கொண்டாடி அளவளாவியிருந்தார்கள். போதகருடைய முகத்துக்காகத் தம்பிள்ளைகளைப் பிறசமயத்தவர்களது வித்தியாசாலையில் விட்டும் பழயமாணவ அரிமைபற்றிய அழைப்புப்பத்திரங்கண்டு நாணத்தோடு வந்த சிலர் "ஐயையோ போதகருடைய முகத்தைக்கண்டிரங்கிய எங்கள் மனம் எங்கள் பிள்ளைகள்விஷயத்திலே வன்னெஞ்சராயினோமே. இங்கே வசிக்கும் பிள்ளைகள் சகலரும் நெற்றிநிறைய விபூதிதரித்துத் திலதமிட்டுக்கொண்டிருக்கிறார்களே. பலவர்ணப் பட்டுப்பீதாம்பரங்களுந் தரித்திருக்கிறார்களே. காலை மாலை வணங்குவதற்குச் சிவன்கோவிலுமொன்றிருக்கிறதே. ஐயையோ எங்கள் பிள்ளைகள் அங்கேயிருந்து விபூதிதரிப்பதையும் மறந்துவிடப்போகிறார்களே. அந்தப் பாவிபோதகராலே கெட்டோமே" என்று சொல்லலுலைத் துருத்திபோற் பெருமூச்சுவிட்டார்கள். சிலர் எமறியம்மையாரைக்கண்டு அவரது கழுத்தில் விளங்கும் உருத்திராக்கமாலையை உற்றுநோக்கி "ஒரு மீன்குழம்புக்காக எங்கள் பிள்ளைகளை அந்நியர்பள்ளியில் விட்டுக் கெடுத்தோமே. இந்தச்சைவப்பழத்தின் பரிபாலனத்தின்கீழ் அவர்களை விட்டோமில்லையே கெட்டோமே" என்றுகொட்டாவிவிட்டார்கள். "வீட்டிலே வந்தவேளை விபூதிபூசக் கூசுகிற எங்கள் பிள்ளை இங்கே வந்தபின்பு பார் நெற்றியில் நிறையப் பூசுகிறதையும் விரதம் அநுட்டிக்கிறதையும். நல்லவேளை உபதேசியின் பேச்சைநம்பினுல் மோசம்போய்த்தான் விடுவோம் நம்பினஎங்களைக் கடவுள் கைவிடார்" என்றனர் சிலர். "எங்கள் பிள்ளை இந்த மருதனைமடத்துப் பள்ளிக்கு வந்தபின் துண்டாய் மச்சம் விட்டுவிட்டான். அவன் வீட்டுக்கு வரும்வேளைகளில் நாங்கள் மச்சச்சட்டியை மறைத்துவிடுவோம். பிள்ளை கண்டானென்றால் சாப்பாடில்லை. ஆண்டவனே எங்கள் பிள்ளை வீட்டுக்கு வந்துவிட்டால் அறையை மெழுகுகிறதென்ன! விளக்கு வைக்கிறதென்ன! பூச்சாற்றுகிறதென்ன! தேவாரம்படிக்கிறதென்ன! இவ்வளவு வயதிலே என்னவாய்த்தான் இருந்திருள் அந்த இராமநாதபிள்ளை சீமான் நல்லாயிருக்கவேணும் வெகுநாளைக்கு" என்று மேலே அண்ணாந்துபார்த்துக் கும்பிட்டார்கள் சிலர்.

இவ்வாறாகவே இவர்கள் பொழுதுபோக்க குறிக்கப்பட்ட சோமாலிய நாலரைமணியாயிற்று. உடனே, உள்ளும்புறமும் வெவ்வேறுயமைக்க சாலைகளிலே ஆடவர் பெண்களாகிய இருபாலாருக்குந் தனித்தனி வெவ்வேறுயமைத்த ஆசனங்களிற் பந்திபந்தியாய் வந்தோரனைவருமிருந்து இந்தியாவிலிருந்து இதற்கென வந்தவர்களும் கைபாகத்திற் றேர்ந்தவர்களுமாகிய பிராமண சுயம்பாகிகளாலே கடலை, மோதகம், உழுந்து, துவரை முதலிய தானியங்களோடு சீனி, சர்க்கரை, கற்கண்டு, தேன், நெய், பால் முதலியவற்றிற் செய்யப்பட்ட தித்திப்புப் பண்ணியங்களும் பலகாரப் பண்ணியங்களும் பலவித பானங்களும், பலவித பழவர்க்கங்களும் அருந்தித்தாம்பூலமுந் தரித்து ஐந்தரைமணியானவுடனே ஆசனங்கள் நிரைத்துவைத்திருந்த சபாமண்டபத்தின்கண்ணே ஆடவர்கள் ஒருபுறமாகவும் பெண்கள் ஒருபுறமாகவும் இடமில்லையென்னும்படி யிருந்தார்கள். அதன்பின்னர் ஸ்ரீ இராமநாத பத்தினியாரவர்கள் சபாநாயகமாய் ஆசனமலங்கிக்க ஸ்ரீமதி. நீதம் அம்மையாரும், ஸ்ரீமதி. ஸ்ளாப்ம் அம்மையாரும் ஒருபுறமாகவும், மாதுஸ்ரீ. எமறியம்மையார் மறுபுறமாகவும் சபாநாயகியைச் சூழ்ந்திருக்க ஸ்ரீஇராமநாதனவர்கள் சபையை நடாத்தினார்கள். உடனே சங்கீதத்திற் றேர்ந்தபெண்கள்ஐவர் தம்பூர் வயோலின் முதலிய வாத்தியங்களோடு சங்கீதம்பாடிச் சபையை மகிழ்வித்தார். அதன்பின் மூன்று சிறுமிகள் நன்கமைக்கப்பட்ட மூன்று மாலை தாங்கிச்சென்று சபாநாயகிக்கும் ஸ்ரீஎமறியம்மையாருக்கும் ஸ்ரீமதி நீதம் அம்மையாருக்கும் சூட்டினார்கள். அப்பொழுது தமிழ்வேதபாராயணமும் நடைபெற்றது. அதன் பின்னர்

இராகம் எதுகுலகாம்போதி. தாளம் ரூபகம்.

பல்லவி.

அம்மாவிவ்விவ்எமறிநீர்எம்மைவிட்டுப்பிரிய
எமக்குமனம்ஒவ்வாதாமே.

அநுபல்லவி.

சும்மாசும்மாஎங்கள்சகங்கேட்டுப்பாலித்த
உம்மாதரவையினியென்றென்றுநாம்மறப்போம்-அ

சரணங்கள்.

எம்மைப்பெற்றதாயர்எங்கெங்கேயிருந்தாலும்
இங்கேஎமக்குவேண்டும்ஏதுங்குறைவில்லாமல்
கண்ணுக்குஇமைபோலேகருதிக்காப்பாற்றினீரே
கடவுள்உம்மைஎன்றுங்காத்தருள்செய்யவேண்டு
[ம் அம்

ஸ்ரீராமநாததர்மம்சிறந்துதழைத்தோங்கவே
ஸ்ரீநடேசனாருந்தியானித்துவழிபடவுத்
திருவிழாச்சிறக்கவேசெய்துதங்களுடன்சேர்ந்து
சிவநாமபஜனைகள்சொல்லிவலம்வரும் அம்

என்ற பிரிவாற்ருமை வாழ்த்துக் கீர்த்தனையை நான்கு பெண்கள் வாத்தியசகிதமாக மிக இனிமையாகப் பாடினார்கள். அதன்பின்னர் உபாத்தியாயினியாகிய ஸ்ரீமதி. மு. முத்தம்மா என்பவர் உபசாரணைப் பத்திரமொன்றை ஆங்கிலத்தில்வாசித்தார். அதன்சாரம் பின்வருமாறு:—

அருமையான அம்மா! இராமநாத வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களுமாகிய நாங்கள், தாங்கள் எங்களைவிட்டுப் பிரிகிற இத்தருணத்திலே பிரிவாற்ருமையாற் கொண்டிருக்கும் துக்கம் இத்துணைத்தென்று சொல்லமுடியாது.

1913-ம் ஆண்டு தைமீ எங்களோடுவந்து சேர்ந்தும் இதற்குள்ளே எங்களோடு உற்றசொந்தமாய் அளவளாவி யிருப்பதைநினைக்க இப்பிரிவு எங்களாற் சகிக்கமுடியவில்லை. அன்றியும் மாணவர்களும் பிறருமாகிய எல்லார்மனதையும் வசீகரிக்கும். அளவுகடந்த சாதுரியத்தன்மையையும் பிரிதல் கூடாது.

முதல்முறையிலேதானே முதன்மை உத்தியோகத்தை வகித்தபடியால் தங்கள் வேலை மிக்ககடினமாயிருந்தது. இருந்தும் தாங்கள் பிரயாசப்பட்டு உற்சாகமாய் உழைத்தே அதை இந்நிலைக்குக் கொண்டுவந்தீர்கள். தங்கள் ஆழ்ந்த சிந்தையும், கூர்ந்த விவேகமும், அகன்ற அறிவும் எங்குள்ளவரிடத்திலும் ஒருபோதும் மறவாத மனப்படிவை யுண்டுபண்ணின. பிள்ளைகளைத் தாயினும் இனிமையாய் ஆதரிப்பதும் உபாத்தியாயர்களை அன்பாய் நடத்துவதும், கடமைபார்ப்பதிலே குறையாத உற்சாகமுமே தங்களை எல்லாரும் நன்குமதிக்கும்படி செய்தது.

தாங்கள் விடுதலைகாலங்களிலும் பிரியாது எங்களோடு உடனிருந்தீர்கள். தங்கள் சீவியம் எங்களை நன்னெறியிற் செலுத்துவதாயிற்று. தங்களுடைய சமயவிசுவாசமும் தாழ்ந்த சீவியமும் எங்கள் பழய சமயபக்தர்கள்போல தங்கள் பயபக்தியும் எங்களுடைய சீவியத்தை உயர்நிலைக்குய்ப்பதற் கேதுவாயின. ஆதலால் தங்கள் பிரிவு எங்களை அதிகமாகத் தாக்கும். ஆனுல் எங்களுக்கு ஒருவகையான ஆறுதல் என்னவென்றால் இங்கிலாந்திலிருந்து வந்த கல்வியபிற்றலில் மிக்க அநுபவசாலியாகிய ஸ்ரீமதி மேபல் அகஸ்டா நீதம் அம்மா பீ. ஏ. வசம் இவ் வித்தியாலயப்பொறுப்பை ஒப்புக்கொடுப்பதே.

எங்களை இவ்வித நன்னிலைக்கு உயர்த்தும் பொருட்டுத் தாங்கள் எடுத்த பிரயாசையைக் குறித்து நாங்கள் தங்களிடத்து என்றும் மறவாத நன்றியும் அன்புமுள்ளவர்களா யிருப்போம். எங்களுடைய அன்பார்ந்த விசுவாசத்தின் அறிகுறியாக நாங்கள் சமர்ப்பிக்கும் இச்சிறு உபகாரங்களை மனப்பூரணமாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம். தங்களை அரோக திடகாத்திரத்தோடு நீடுழிவாழும்படி ஆசீர்வதிக்குமாறு சர்வவல்லமையுள்ள சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
இராமநாதவித்தாலயத்து
ஆசிரியர்களும் மாணவர்களும்

என்பதே. அதன்பின்னர் விலையுயர்ந்த பட்டுவர்க்கங்கள் பீதாம்பரங்கள் பணப்பை முதலியன ஸ்ரீ எமறியம்மா அவர்களுக்குப் பிள்ளைகள் சமர்ப்பித்தார்கள். அதன்பின்

இராகம் பலகிரி. தாளம் ரூபகம்.

பல்லவி.

மதிப்பாம்மண்டினில்நாம்அநுதினமும்
புனோதன்ஸ்வார்மிஸிஸ்எமறியைநிதம் மதி

அநுபல்லவி.

துதிபொருந்துமிராமநாதவித்தாலயாசித்துவம் [து
ஸ்ரீமதிமேபல்நீதம்பீ.ஏ.இடம்ஒப்பித்
இளைப்பாறுஞ்செல்வியை மதி

சரணம்.

விபூதிகண்டிகை தாரணி—பிக்கபரி
சுத்தாவரபோகனி—சிவசிவவென
நாமமந்திரபூதனி—சிவஞான
போதமுணர்பூரணி
சிற்பசித்திரசற்சரித்திரநீதவாத்தியவிநோதினி
கற்பவர்க்கதிநுட்பமாயவைகாட்டிவைத்தசிமாட்டி
யைநிதம் மதி

என்ற கீர்த்தனத்தை முன்பு பாடியவர்களே பாடினார்கள். அதன்பின்னர் ஸ்ரீ இராமநாதனவர்கள் எழுந்து ஸ்ரீ எமறியம்மையாரைத் தாம் இங்கிலாந்திலே முதன்முறை சந்தித்தது அவருடைய கல்வி குணம் முதலியவற்றையும் பலவாறு புகழ்ந்துபேசி "தமதிடசித்தத்தின் வேறொருவர் அகப்பட்டவுடனே தம்முத்தியோகப் பொறுப்பை அவரிடத் தொப்பித்துவிட்டுத் தாம் இளைப்பாறவேண்டும்" என்று ஸ்ரீ எமறியம்மையார் முன்னே கேட்டபடியே அவருடைய இடத்துக்குத் தகுந்த ஒருவரை நியோகித்து ஸ்ரீஎமறியம்மையார் இளைப்பாற மிச்சமயத்திலே இவ் வித்தியாலயத்துள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் அவரது பிரிவைக்குறித்து மிக மனம்வருந்துகின்றபடியால் அவரெவரும் மகிழுமாறு இவ்வித்தியாலயத்து "தருமிகாரி" உத்தியோகத்தை வகிக்கும்படி ஸ்ரீ எமறியம்மையாரைக் கேட்க அவரும் யாதொரு வேதனமுமின்றி உபகாரமாகவே அவ்வுத்தியோகத்தைப் பார்க்கிறதாக ஏற்றுக்கொண்டார்களாதலால் அது யாவர்க்கும் நன்மையாகவே யிருக்குமென்றும் பிறவும் பேசி முடித்தார்கள்.

அதன்பின்பு ஸ்ரீ எமறியம்மையார் எழுந்து தமசபிப்பிராயங்களைப் பேசியபோது ஸ்ரீமதி நீடாம்அம்மாவின் குணாதிசயங்களையும் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகிய இருபாலாரையுந் தக்கபடி வியந்து கூறித் தமது பேச்சை முடித்தார்கள். அதன்பின் முறையே ஸ்ரீமதி நீடாம் அம்மா ஸ்ரீமதி ஸ்ளாப்ம்அம்மா ஸ்ரீமத் சுவாமிநாதனவர்கள் பீ. ஏ. என்பவர்கள் தத்தமபிப்பிராயங் கூறியதோடு சபைவந்தனமுங் கூறி முடித்தார்கள். அதன்பின்னர் ஸ்ரீ இராமநாதனவர்கள் எழுந்து ஆலயத்திற் பூசாகாலமானபடியால் வித்தியாசாலையிலுள்ள பிள்ளைகளின் பெற்றோராயுள்ளார் விரும்பினுல் சுவாமிதரிசனஞ்செய்துகொள்ளலாம் என்றதன்பேரில் சுவாமிதரிசனஞ்செய்ய வசதியுடையவர்கள் ஆலயத்திற்குச் செல்ல ஏனையோர் மனமகிழ்ச்சியோடு தத்த மில்லங்கட் கேகினார்கள். ஆலயத்துக்குச் சென்றவர்கள் சுவாமிதரிசனஞ்செய்து பிரசாதமும் பெற்றுக்கொண்டு ஏழரைமணியளவில் தங்கடங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்.

ஆலயத்திலே பிள்ளைகள் சுவாமிதரிசனஞ்செய்த விதங்களையும் பாடின தோத்திரங்களையுங் கண்டுங்கேட்டும் நின்ற பெற்றோருள்ளே மனமகிழாதார் யாவர்?

இங்ஙனம்
கண்டுகேளித்தோன்.

---

ஆறிரு தடந்தோள்வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக், கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம் வாழ்கசெவ்வேள், ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்குவாழ்க, மாறிலா வள்ளிவாழ்க வாழ்க சீரடியரெல்லாம்.

Printed and published by V. Kanapatip Pillai for the Proprietor at The Vidyalaya Press Jaffna.